உ

குருவே துணை.

குமர[illegible]

MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHAIYER LIBRARY
THIRUVANMIYUR, MADRAS

இந்நூல்

பழநாபுரியிலிருக்கும்

குப்பராமசாஸ்திரியார்

குமாரர்

வேங்கடசுப்பய்யயர்

கேட்டுக்கொண்டபடி

ஷை ஊர்

ம-ள-ள-ஸ்ரீ.

மூத்தாசாரியார்-குமாரர்

மாம்பழக்கவிச்சிங்க

நாவலரியற்றியது.

வித்துவான்-காஞ்சீபுரம்.

சபாபதிமுதலியார்

ஷை நாவலர்பாடத்திருந்துவந்த

கையெழுத்துப்பிரதிக்கிணங்கப்

பார்வையிட

ஷை வேங்கடசுப்பையரால்

பு-ம. சபாபதிமுதலியாரது

கல்விவிளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை-அணா-உ.

சென்னை

உருத்திரோற்காரி௵ பங்குனி மீ 1864

U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

சிவமயம்.

சாற்றுக்கவி.

சென்னைக்கல்விச்சங்கத்தில்

தமிழ்த் தலைமைப் புலமை நடாத்தும் - இயற்றமிழாசிரியர்

திரு-விசாகப்பெருமாளையரவர்கள்

இயற்றியது.

கட்டளைக்கலித்துறை.

பூம்பழநிக் குகன்றனிலந் தாதிப்புனைதமிழ்ப்பாத்
தீம்பழச்சாறுமமுதமுமொப்பச்சிலைமதன்கை
கூம்பழகாளன்முத்தாசாரிமைந்தன்விசுவகுலன்
மாம்பழச்சிங்கநன்றுவலன் சூட்டிமகிழ்ந்தனனே.

வித்வான்-காஞ்சீபுரம்-சபாபதிமுதலியாரவர்கள்

மாணாக்கர்-புரசை-அஷ்டாவதானம்

சபாபதிமுதலியாரியற்றியது.

விருத்தம்.

பழஞாயின்மாமணிபகர்ந்தபெருமானின்ற
வண்பழநிமருவுசெட்டிக்குமரவேண்மே
லதுலன்மாம்பழக்கவிச்சிங்கன்மூத்தோற்கன்
றரணளித்தகனியிலுளவேட்கைமுற்றச்
சதுர்பெறுதல்பெயர்க்குரியசுவைதோய்ந்தென்றுத்
தகவுளையந்தாதியரதநக்குவாலை
முதுமறைதேர்வேங்கடசுப்பையனிடு
முறைகொளச்சுநிதானத்திற்குயிற்றினனால்.

சிவமயம்.

புத்தகவிளம்பரம்.

இதனை அன்பர்கள் யாவருக்கு மறிவிப்பதியாதெனில

ம-௱-௱-ஸ்ரீ. ப - மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்களால்

இயற்றி

அச்சிற்பதிப்பித்த

புத்தகங்கள்.

குமரனந்தாதி

சிவகிரிப்பதிகம்

பதித்துக்கொண்டுவரும்புத்தகங்கள்.

சிவகிரியமகவந்தாதி

திருச்செந்திற்பதிகம்

பதிப்பிக்கப்படும் புத்தகங்கள்.

பழநிவெண்பா

பழநிநான்மணிமாலை

௸ புத்தகங்களை வேண்டியவர்கள் மதுரைஜில்லா பழநித் தாலூகா ௸ நகரத்தில் குப்பராமசாஸ்திரியார் குமாரர் வேங்கடசுப்பையா வீட்டில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

உ

சிவமயம்

பாயிரம்.

மதுரைஜில்லா பழநித்தாலூகா போலீசுராயசம்

ம-ள-ள-ஸ்ரீ வேங்கடசுப்பையரவர்கள்-குமாரரும்

மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்களது - மாணாக்கருமாகிய

வி-சுப்பராயபாரதியவர்கள்

இயற்றியது.

இரட்டைஆசிரியவிருத்தம்.

வயல்புடைசெறிந்துவளமலிபழநியப்பதியில்
வருகுமரனினிதுவப்ப
வளர்விசுவகுலசிகாமணிபுலவர்கணிமுத்து
மகிபதிதவத்துதித்த
செயமுயர்தருப்பசுந்தமிழ்மாம்பழக்கவிச்
சிங்கநாவலனுவந்த
செஞ்சொலந்தாதியையரங்கேற்றியன்பினொடு
செம்பொனகரச்சேற்றினன்
வியன்மலயமடந்தைதிகழ்வேதியர்குலாதிபதி
வீறுகலைமுழுதுணர்ந்தோன்
மெய்ம்மைபெறுகுப்பராமையதிறிதருபுதல்வன்
விற்பனர்கொருகற்பகன்
நயவெழில்சிறந்தசிவசாமிதுணைவள்ளல்சுக
சரசசல்லாபமதனன்
நடமுத்தமார்பவேங்கடசுப்பையேந்திரகன
சுருமரயமணசந்திரனே

பாயிரம்.

பழநிக்கிராம முனிசீபு-ம-௱-௱-ஸ்ரீ.

சபாபதிமுதலியாரவர்கள்-குமாரர்

வீராசாமிமுதலியாரவர்களால்

இயற்றியது

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மலர்வனிதைதிகழ்பழநிமலையின்மிசைவளர்குமர
  வரதன்மீதிற்
பலகலையுமுணர்தமிழ்மாம்பழக்கவிசிங்கக்குரிசில்
  பகர்ந்துபோற்றும்
புலவாமகிழந்தாதிதனையரங்கமேற்றியச்சிற்
  பொருத்தினனால்
விலகரியபுகழ்குலவுவேங்கடசுப்பய்யனெனும்
  விஜயமாலை

பழநித்தாலூகா

ஆயக்குடியிலிருக்கும்

ம-௱-௱-ஸ்ரீ.வித்துவான்

பழநியாண்டியாபிள்ளையவர்கள்

இயற்றியது.

கட்டளைக்கலித்துறை.

வயவடிவேற்கும ரன்புயங்கட்கொரு மாலிகையாச்
செயமுயர்சேது பதிமெசியகவிச் சிங்கமெனு
மியல்கெழுநாவலன் சூட்டுமந்தாதியச் சேற்றினனாற்
புயலெனவேவளர் வேங்கடசுப்பைய பூபதியே.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
குருபே... TIRUVANMIYUR, MADRAS-41.

குமரனந்தாதி.

கட்டளைக்கலித்துறை.

பூமேவுகற்பகப்பொன்னகர்முன்னோர்புலவனுக்கு
மாமேவுமன்பின்வழங்கியபேரருள்வள்ளலெனு
நாமேவுவேற்கைக்குமரனந்தாதிக்குநற்பழநிப்
பாமேவுசீர்திகழ்பட்டத்தியானைபதந்துணையே. (௧)

அன்பர்துதி.

பொருந்திரைவேலை யருந்தியசெல்வனைப் போற்றியின்பந்
திருந்துமருணை கிரிநாதன்பொற்பதஞ் சிந்தையில்வைத்
தருந்திறல்சேர்திருத் தொண்டர்களைப்பணிந் தன்பினர்பால்
வருந்தனிமோனக் குமரனந்தாதி வழுத்துவனே. (௨)

இதுவும் விநாயகர்துதி.

அமரனந்தாதி னளினந்தொறுந்துயி லம்பழநிக்
குமரனந்தாதி சொலத்துணையாமயன் கோபதிவாழ்த்
துமரனந்தாதி பணிவர்கொண்டாடவத் தோன்முகற்காய்
சமரனந்தாதி லகுமைங்கரத்தன்பொற் றாளிணையே. (௩)

நூல்

புவனங்கடந்த பரம்பொருளேயொளிர் பொற்புடைத்துங்
கவனங்கடந்த னடைதனைநேர்சசி கண்களிகூர்
தவனங்கடந்த விரமுன்னருள்வர தாமலப்பா
வவனங்கடந்த கந்தா நம்பினேனின் மலர்ப்பதமே. (௧)

பதங்காதலங்குற வஞ்சிகையவர்தம் பாற்சொலிச்சந்
நிதங்காதலங்குற வாக்குமம்மாதனைச் சார்ந்துடலம்
வதங்காதலங்குற நற்போதந்தந்தெனை மாசடரா
விதங்காதலங்குற ளாயுளத்தோன்றெழு மெய்ப்பொருளே (௨)

மெய்யந்தரங்க முதல்வனைத் தானவர் வீறுயிருட்
குய்யந்தரங்க வருநெடுவேலனைக் கூறுதுதி
செய்யந்தரங்க மெறிகடல் ஞாலத்துச் செல்வமெல்லாம்
பொய்யந்தரங்க வனமுனக் கேனிற் புன்மனமே. (௩)

புன்றுகமஞ்சு பொறுக்குப் பழநிப் பொருப்பிலுறை
மன்றுகமஞ்சு குணமாதவத்தர் வழுத்துமுமை
துன்றுசமஞ்சு முகமுடையானரு டோன்றல்விடப்
பன்றுகமஞ்சு மயிலவனைப் பணி பாறுநெஞ்சே. (௪)

பற்றகராதர நாட்டுவெரு சூரனைப் பட்டபொருவே
லுற்றகரா தரங் கோதாரதன்மகத் தாடெழுந்த
மற்றகரா தரங் கஞ்சமென்றாளை மடத்துருகா
வெற்றகரா தரங் கொட்டனோர் பவம் விட்டிலமே. (௫)

விட்டிலங்காவ தியாலமையாதகட் மேல் விழலபோற்
கட்டிலங்காய மிரிவாறுதலிற் கனவிலகப்
பொட்டிலங்காவ லரிவையர் மெய்யலவிற போவதென்னே
மட்டிலங்காவ துடையான் மருகனை வாழ்த்துநெஞ்சே. (௬)

வாழ்விற்றனந்த வளாவதமெனச் சுமையங்கட் நதி
தாழ்விற்றனப்ப வினைசெயலுற்பயத் தைதகருமொர்
பாழ்விற்றனந்த கவா நடையாசம பாசநெஞ்சே
சூழ்விற்றனந்த மலைக்குமரேசன் றுணைச்சரணே. (௭)

சரங்காவிதந்தர மெஞ்சயயப் பதுகட் டையலாயா
விரங்காவிதந்தர வந்தருள்வாய் பொன்னெழினலமு
திரங்காவிதந்தர வஞ்சநடிக்குஞ் சிகாவளமா
துரங்காவிதந்தர னன்கருள் வள்ளிக்குறத் தோய்பவனே. (௮)

தோயவலைநகு வடைந் துருளெள்ளனத் தூலங்குமெழி
லாயவலைக்கு மிழினையா யொருமுலை யாதகட்டு
மாயவலைக்குள் வசிட்டப் படுதேவமா வாளவுணை
ரோடவலைத்து மயிற்புமாவரு ளானமிழ்மே. (௯)

மதியாதவனற் சினமூடர்கட்கு வரந்தரச்சம்
மதியாதவனற் குழற்குஞ்சரிமண வாளனவிர்
மதியாதவனற் சுரர்பணிவேளருள் வாழ்வுறத்தா
மதியாதவனற் புதமலர்த்தாளை வழுத்துநெஞ்சே. (௧0)

வழுத்தவிரும்பழ வாரணத்துச்சியில் வாழ்முருகன்
கொழுத்தவிரும்பழ னம்புடைசூழ்ந்து முறைவிலைம்பம்
பழுத்தவிரும்பழ நிக்குமரேசன் பதத்தினையுள்
ளழுத்தவிரும்பழ னீள்வினைப்பாசம றுகுநெஞ்சே. (௧௧)

அறந்தவளமலை யாற்குரைத்தோயங் கவலைசடைமேற்
சிறந்தவளமலை யன்பாமைந்தாவினை செய்யமநித்
தறந்தவளமலை கொங்கையாமைய றவிர்த்தருளசீ
பிறந்தவளமலை வின்மாபழனிப் பிரபலனே. (௧௨)

பிரமனந்தத்த மிசையேந்துமாயன் பிறங்குவேலுமா
திரமனந்தத்த வசித்தாபுகழ்மந்தி ராவெனகா
கரமனந்தத்த துருதருள்செய்பொற் கமலநிரந்
தரமனந்தத்த மருட்பெய்பழநித் தயாபரனே (௧௩)

பரவற்கரிய பதந்தருஞானம் பயிறருமலர்
விரவற்கரிய குழலாரமயல்வெவ் வினைதவிர்க்குங்
கரவற்கரிய திகர்தொழுந்துயன் கனவமளி
யரவற்கரிய தளித்தாலிமகன் சரணம்புயமே. (௧௪)

புயங்கந்தனக்கு நிகரானவல்குலும் பூவுலக
மயங்கந்தனக்கு வடுமுடையாரின்ப வாழ்வுநற்செய்
வியங்கந்தனக்கு விடுதிலையோ நெஞ்சமேயிதநிந்
தியங்கந்தனக்கு மரனருளாகிய செல்வமெய்யே. (௧௫)

செல்வங்கவனத் தொடையான்மருகன் செகமேனுமிவ்
வில்லங்கவனத் தமதகன்றாக்கருணை மெய்க்குமரன்
புல்லங்கவனத் துகைப்பான்மைந்தன்பதம் போற்றுநெஞ்சே
சொல்லங்கவனத்திருப்புகழ்வைவச்சுதனஞ்சவே. (௧௬)

அஞ்சரிதான புலன்மற்றதனைவென் றங்கமைவை
யஞ்சரிதான வனிவாழ்வுபொய்யென் றுணர்ந்துதெய்வ
குஞ்சரிதான வனவள்ளிகோனன்பு கொண்டவர்பாற்
சஞ்சரிதான தவமிதுமுத்தி தருநெஞ்சமே. (௧௭)

தருமங்களங்கலங் காரம்பெறத்திருத் தார்பிறாமேல்
வருமங்களங்கலங் ருங்கொலைகாமம் வளர்த்துவர்செந்
திருமங்களங்கலந் தோங்கும்பழநிச் செவ்வேளைபுன்றோர்
கருமங்களங்கலந் தீர்வதெவ்வாறு கனநிலத்தே. (௧௮)

கனகமலைக்குங் கவின்றருபூண்முலை காதடர்கண்
பனகமலைக்குங் கடிதடங்கொண்டவர் பற்றுமிகுந்
தெனகமலைக்குந் துயாதீரரிக்கு மிலங்குமயி
லனகமலைக்குந் திருமருகாநின் னடைக்கலமே. (௧௯)

கலங்காமனத்தினமன்னைப்படாதெனைக்காவுனடைக்
கலங்காமனத்தினதென்றாலுலாவக்கடிகமழ்ந்த
கலங்காமனத்நினமின்புறவந்தகந்தாகதிபு
கலங்காமனத்தினமோபழநாபுரிக்காவலனே. (௨௰)

காவம்பரத்தைபாராவுஞ்செந்தூர்க்கிரிவேற்குமர
மேவம்பரத்தையனையகவலைமிடிகொடிய
பாவம்பரத்தையராசைகிரகப்பகைதவிர்த்துத்
தாவம்பரத்தைபுணருமெய்ப்போதஞ்சதாநந்தமே (௨௧)

நந்தாமலகலிடம்புகழ்ச்சைவதத்தைநாட்டியவேற்
கந்தாமலகமுடையாருளத்தனுகாகுமரா
முந்தாமலகவனத்தரசேநின்முத்திரருளின்
பந்தாமலகவனந்தால்வருமுற்பவமறவே. (௨௨)

பவளம்பரவவருமிதழ்வேல்விழிப்பாமகளா
யவளம்பரவமராருய்யவந்தபெய்யாவினைதீர்
திவளம்பரவ மருதவயல்புடை சேர்ந்துதலங்
குவளம்பரவ வளரும்பழநிக் குமரய்யனே. (௨௩)

ஐவளாயங்க சனைநெடுங்கூற்றை யடக்கிமுழு
மைவளாயங்க ணியலாவெல்வீரன்று வள்ளியஞ்சக்
கைவளாயங்க மதமாவழைத்தருள் காரணன்மெய்ச்
சைவலாயங்க முதமேற்றுவான்பெயர் சாற்றுமினே. (உ௪)

மின்னலங்கார தனிலெழல்போலு மிம்மேதினியிற்
பொன்னலங்கார மனைமுதல்வாழ்வதிற் போயுழன்று
பின்னலங்கார மிகுகோபமேவுப்பித் தீர்குமரன்
றன்னலங்கார மலர்த்தாளெஞ்ஞான்றுந் தலைக்கொண்மினே.

கொண்டலைவாவி வெருட்டிக்கமுகின் குலையுதிர்த்துத்
தண்டலைவாவி தனில்வாளைமேவுந் தமிழ்ப்பழநி
வண்டலைவாவி கடமிடிதீராதிரி மைந்தாவலி
கண்டலைவாவி பொருந்திமையோரைமுன் காத்தவனே. (உ௬)

தவந்தானமல வினைகொண்டுகாலந் தனைக்கழித்த
லவந்தானமல ரளிநாடல்போலும்பா யாருமதிப்
பவந்தானமல னெனுங்குமரேசன் பழநியென்று
மூவந்தானமல் மொழிப்பானைத்தேடி யுருகுநெஞ்சே. (உ௭)

உருவாரமர மனையாரருமை யுளத்துணரார்
தருவாரமர மகன்றனைப்பாடித் தயங்குவரே
மருவாரமர வணிந்தசெவ்வேணி வரன்புதல்வா
திருவாரமர தனாதிபனேநற் செயலருளே. (உ௮)

செயமந்தராசல வண்டோட்குகனைத் தினமறந்தம்
புயமந்தராசல னங்குழலொப்பவர் புன்னலநம்
பியமந்தராசல நீங்காவவர்திருப் பெற்றியெல்லா
நியமந்தராசல மேலாங்குமிழி நிலைத்தென்பவே. (உ௯)

பவராகவத்திரி பாசொழியானும்பர் பற்றலரொன்
பவராகவத்திரி யத்தடிந்தானுற் பவந்தவிரின்
பவராகவத்திரி யாதிமுனிவர் பணிகுகன்சு
பவராகவத்திரி யானுண்டெமக்கோர் பயமில்லையே. (௩௰)

பயம்புவைப்பாரத் திகள்போன்மயலுட் படேல்சிரத்துந்
தியம்புவைப்பாரத் திருநுதலுட்டத் தினிலுதித்த
சுயம்புவைப்பாரத் தனையுந்தந்தானைத் தொழுதுதமி
ழியம்புவைப்பாரத் தனிவேல்மயிலையு மெண்ணுநெஞ்சே (௫௧)

நெஞ்சகத்தானந்த ந்பமுளான்கரி நீள்வதன
வஞ்சகத்தானந்த வான்புகத்தாக்கு மயிற்குமரன்
விஞ்சகத்தானந்த மெய்யடியாரை விடானைமறந்
தஞ்சகத்தானந்த னந்தவர்க்கீந்துமென் றுவதுவே. (௫௨)

ஆவலரும்பணி மெல்னகைமங்கைய ராடவந்து
மேவலரும்பணி செல்வரும்பொன்றினர் வீணதன்றோ
நீவலரும்பணி லஞ்சூழ்வயற்பழ நிக்குமரன்
பூவலரும்பணி மாபன்கழற்கன்பு பூண்மனமே. (௫௩)

பூண்டவிராதவ மாமுலைமங்கையர் போகமெனு
மூண்டவிராதவ வன்பரிதய முளரிவிள்ள
வாண்டவிராதவ னுங்குமரேசனை யல்பிறொடு
வேண்டவிராதவ மாசெளிதாமுயர் மெய்க்கதியே. (௫௪)

கதித்தவரும்பரல் வெங்கான்புகுதக்கை கேசிசொற்சம்
மதித்தவரும்பர கோரமறலி மயக்கிகந்த
விதித்தவரும்பர வுங்குமராவன்பர் மெய்ப்பிணிதீ
துதித்தவரும்பர நாதாமெய்ஞ்ஞான சுகமருளே. (௫௫)

சுகந்தங்கமழ முலையவிழ்கற்பகத் தூயநிழ
லகந்தங்கமழ களிற்றிந்திரனைவைத் தாயதிபா
தகந்தங்கமழ கியமாதர்க்காகநெஞ் சத்தெணிப்பொய்
யுகந்தங்கமழ ஒருதெனையாண்டரு ளுத்தமனே. (௫௬)

மனத்திருக்கானவை வாராநன்முத்தி வழிவருஞ்சந்
தனத்திருக்கானவை தீகமெய்ஞ்ஞானத் தமிழ்முனிசெஞ்
சொனத்திருக்கானவை திருப்படிபுகழ் தூயவன்பொய்
யினத்திருக்கானவை வானோர்தலைவனை யெண்ணுமினே. (௫௭)

மின்னுகரிக லருந்தவத்தோரு மிகமயங்கப்
பன்னுகரிக வுளமுதற்கீதம் பயிலுநல்லா
ரின்னுகரிக மறக்குங்கண்டீர்சகத் தீர்மலர்த்தார்
மன்னுகரிக பரந்தருவேலர் வரம்பெறினே. (௩௮)

வரம்பினத்தோடு மதுராபுரியில் வழுதியர்கோன்
சுரம்பினத்தோடு தவிர்த்தமெய்யாதொண்டர் தூய்மனத்தா
தரம்பினத்தோடு மினமன்றுளாடிய சம்புமைந்தா
நிரம்பினத்தோடு விரிகடம்பாசர ணின்பதமே. (௩௯)

பதனம்பதனந் தளரிடையெல்னப் பணைத்தொளிர்கும்
பதனம்பதனந் துருமதுச்சொற்பரனைப்பொருச
பதனம்பதனந் தரமாங்கணுள்ளவா பற்றறவேள்
பதனம்பதனந் தருஞானமோன பலநெஞ்சமே. (௪௰)

பலவாமகத்துவந் தோங்குமயக்கவை பாரவினை
கலவாமகத்துவந் தங்குமெய்ஞ்ஞானக் கதியருள்சொற்
புலவாமகத்துவந் தெல்லாம்பெறுமப் புனிதர்புகழ்
வலவாமகத்துவந் தன்னநடைத்தகர் வாகனனே. (௪௧)

வாகாதுவருமங் கொவ்வாதமேனி வரன்றருமைந்
தாகாதுவருமங் காக்குழையாயினந் தாமதமேன்
ஆகாதுவருமங் கேகயமீதுவந் தாரருள்செய்
தேகாதுவருமங் குற்குழலாரன்பு தீர்த்தென்றுமே. (௪௨)

தீர்த்தமனந்தர மானதலம்பல சென்றிடினுங்
கூர்த்தமனந்தர முண்டாகுமோகதி கூடவென்றுற்
கார்த்தமனந்தர தத்துதிப்பானெனக் காய்ந்தமனைப்
பார்த்தமனந்தர ரேத்துங்குமரனைப் பாடுமினே. (௪௩)

பாடலங்காத வழிமணங்காட்டும் பழநிமுத
லீடலங்காத னெறிமறையெங்கு நிறைகுகனைக்
கேடலங்காத மனத்துட்கொண்டார்பவக் கேதமிப்பார்
மூடலங்காத வினைக்கண்டென்னு முடிவுறுமே. (௪௪)

முடிக்குமராம மலர்க்குழல்வேழ முதல்வியென்ப
வடிக்குமராம னுலகும்பணிவள்ளி யென்னுமிரு
குடிக்குமராம னவையுண்டுவண்டினங் கூடியிசை
படிக்குமராம லணிபுயனேநின் பதமருளே. (௬௫)

பதக்கமலங்க வளர்மார்பனேதண் பணைதொறுமுச்
சிதக்கமலங்க டனைமேய்ந்துகாவியைச் சேவினம்வாய்
குதக்கமலங்க துறங்கும்பழநிக் குருபரநீ
துதக்கமலங்க வலைதவிர்த்தாண்மெய்த் துணிவுதந்தே. (௬௬)

தந்திக்குமார முடியிமையோர்க்குமச் சந்தணிந்தோன்
உந்திக்குமார னுறுசிறைநீத்த வுனக்கரிதோ
முந்திக்குமார னமர்கடந்தோங்கு முனிவருளஞ்
சிந்திக்குமார முதமேயெனக்கருள் செய்வதுவே. (௬௭)

செய்யவடங்கவி மார்பனையனிந் திரனுவப்ப
வெய்யவடங்கவி புன்மனத்தானவர் வீடவன்பர்
உய்யவடங்கவி னுருபஞ்சரவணத் தூடுதித்த
துய்யவடங்கவி னர்முலைமாதா துறவருளே. (௬௮)

துறக்கவரப்பயர் போகநன்றென்னினுந் தூயருள
பிறக்கவரம்பயர் கட்பார்மின்னாபற் றெனினுமதை
மறக்கவரம்பய னுகவெனக்கருள் வார்செழுங்கன்
னறக்கவரம்பயல் சூழ்பழனாபுரி நாயகனே. (௬௯)

கனவஞ்சனஞ்சின மன்னவொன்னார்புறங் கண்டவெங்க
கனவஞ்சனஞ்சின மில்வாழ்வுட்பெற்றவர் காலமுமோர்
கனவஞ்சனஞ்சின முற்றகண்ணார்சுகங் காட்டுபின்வா
கனவஞ்சனஞ்சின கைக்குமாரநின் கழலருளே. (௭0)

கழங்காடியன்ன நடையாரைக்கூடிவெங் கள்ளருந்தி
வழங்காடியன்ன குருவைநீந்தித் துயிர் மாய்த்தொழியார்
பழங்காடியன்ன மெனினுமுண்டின்னருள் பற்றுவரி
யிழங்காடியன்ன வநிகர்செந்திற்குக வேடொண்டரோ. (௭௧)

வேடுவரிக்கலை நேர்மனத்தோடெறி வெவ்வலைக்குள்
வாடுவரிக்கலை தப்புவதென்ன மதிகுநல்லோர்
நீடுவரிக்கலை மண்டலத்தாசை நெருக்ககன்று
கூடுவரிக்கலை செய்சூழ்பழநிக் குருவருளே. (௫௨)

குருவருணத்துவர் மெல்லிதழ்வள்ளி கொழுநனங்கை
மருவருணத்துவ கைக்கோமகன்சுதை வானவர்கந்
தருவருணத்துவ ளக்கடலைக்கடைந் தான்மருகன்
திருவருணத்துவர் பேர்கூறினும்பவத் தீதஞ்சுமே. (௫௩)

அஞ்சுவர்க்கத்தலை நெஞ்சைத்திருத்தி யணிமகரந்
துஞ்சுவர்க்கத்தலை யாழியனையமெய்த் தூயவனுக்
குஞ்சுவர்க்கத்தலை வற்குமெட்டாத குமரனன்பு
விஞ்சுவர்க்கத்தலை மோனமுண்டாமெனும் வேதங்களே (௫௪)

தங்கச்சிலம்பகங் காநதிமைந்த தனத்திடைசோ
யுங்கச்சிலம்பகங் காட்டிமின்றா வெஃறோர்மதியு
மங்கச்சிலம்பகங் காரித்தெப்போல்குடை மைதவழுந்
துங்கச்சிலம்பகங்காமுற்றுளோய்தள்ளென்றேல்பவமே. (௫௫)

பவர்க்கஞ்சமர விழிமாதர்பற்றறும் பற்பலபே
தவர்க்கஞ்சமர சமதாமெய்ஞ்ஞானத் தவம்பலிக்குந்
துவர்க்கஞ்சமர பதசூழ்பழநிச் சுகபரன்று,
னவர்க்கஞ்சமர ரிடர்தீர்த்தவேள்பத நம்புவர்க்கே. (௫௬)

நம்புங்கவரிய மாதிகண்டோர்பணி நாதர்மல
ரம்புங்கவரிய வேண்மைத்துனனொன்ன லார்பலமும்
வம்புங்கவரிய னீள்வேலர்தாளை வழுத்தினும்பால்
வெம்புங்கவரிய மன்புகுமோசொல்லும் வீணர்களே. (௫௭)

களவரவிந்த மதியர்சினத்திற் கடியவிட
மூளவரவிந்த னமுமனையார்நட் பொழித்தனது
தளவரவிந்த பதம்பெறுநேமமுந் தந்தருள்வாய்
மௌவரவிந்த வகந்தணித்தோன்பணி வேலவனே. (௫௮)

வேலாவலய மடைத்தோன்சுரர்மக வேந்துமறை
நூலாவலய னுவப்பப்பொருப்பற நூறியவேற்
கோலாவலய ரவருங்கொடுங்கதிர்க் கோனுமிணை
சாலாவலய மணிபுயனேமுத்தி தந்தருளே. (௫௯)

தந்தத்தத்திக்கு வருதுணைவாவரந் தந்தருள்வி
தந்தத்தத்திக்கு மதனனடத்துந் தனிரதநீ
தந்தத்தத்திக்கு தொறுமணஞ்சூழ்செந் திலாய்தமிழோர்
தந்தத்தத்திக்கு மடமைதவிர்க்குந் தவக்கொழுந்தே. (௬௦)

தவளவிலங்க றனையன்றெடுத்த தரனுமிடை
துவளவிலங்க முலைப்பூமகணலந் துய்ப்பவெண்ணி
யவளவிலங்க மழிந்தான்புன்காமநன் றன்றுதொண்ட
கவளவிலங்க ளுறைவேலற்போற்றுமின் காதல்கொண்டே.(௬௧

காதகப்பாவளைத் தேடிப்புகழ்ந்துபற் காட்டிமுறை
யேதகப்பாவளைக் காசுக்கும்பாடிப்புண் ணெய்துவரோ
ழுதகப்பாவளைக் கொக்குஞ்செந்தூர்ச்சன் முகாவெவர்க்கு
மாதகப்பாவளைக் குங்கலிதீர்த்தருண் மாசின்மையே. (௬௨)

மாசினமாவரு துன்பத்துளென்னை மயக்கலுனைக்
கேசினமாவரு ளாற்புரந்தோனிகா கேழ்முகிலை
ழுசினமாவரு டேரகத்தோய்முறை யோவிதுநீ
பேசினமாவரு மஞ்சிறியேன்செய்த பேதமென்னே. (௬௩)

பேதாமனங்கன தம்படராதெனைப் பேணமுடி
யாதாமனங்கன சக்கிரிநேர்புயத் தார்ந்தநிம்ப
மாதாமனங்கன னோய்தீரநீறு வழங்குகுரு
நாதாமனங்கன கல்லோவின்றோ நன்னடுநிலையே. (௬௪)

நடுக்கந்தரத்தடமாமெனச்சூழ்ந்து நலிந்தபவங்
கடுக்கந்தரத்தம னத்துண்மயலுங் கடிதகல
முடுக்கந்தரத்தம ரேசன்றெழப்புலி முற்றுமுன்காரி
வடுக்கந்தரத்தமர் வான்சொற்படிவலம் வந்தவனே. (௬௫)

வந்தித்தியங்கு மவர்க்கெளியாய்மெய் மறந்தறிவன்
புந்தித்தியங்கு நயங்காட்டப்பாடுமப் பூவையர்பாற்
சிந்தித்தியங்கு மதத்தோரிடத்துஞ் செலாமலென்சித்
தந்தித்தியங்கு முழுதும்புகழ்பதந் தந்தருளே. (௬௬)

தந்தாவளக்கரும் பூதரவாய்தனிற் சார்ந்தநன்னீர்ச்
செந்தாவளக்கரும் பென்னமின்னார்வசஞ் சேர்தனன்றே
தந்தாவளக்கரும் போதாதமோக நலைதவிர்ப்பாய்
கந்தாவளக்கரும் பூரணஞானக் கதிக்கொழுந்தே. (௬௭)

கொழுங்கோகனக முகவேளன்றூபர் குடியிடைத்த
வழுங்கோகனக குபேரனென்றேகுங் குமைச்சுமைகொண்
டெழுங்கோகனக சடரைப்புகழ்ந்துபொய் யீங்குரைப்ப
தொழுங்கோகன வலைதீர்க்குமையனை யுன்னுநெஞ்சே. (௬௮)

உன்னங்கிரியை வழுத்தார்கிளைபெண் டொடுதநயர்
சொன்னங்கிரியை பெறினுமுண்டோகதி சூதயர்ந்து
முன்னங்கிரியை வருக்கருள்செய்த முதன்மருகா
மின்னங்கிரியை யடர்த்தசெவ்வேற்படை வித்தகனே. (௬௯)

வித்தம்புயங்க மணிதண்டிகைகரி வெம்பரியல்
வித்தம்புயங்க மிளிர்கண்மினார்முதன் மெய்த்திருமே
வித்தம்புயங்க டதும்பநின்றூழுமுள் வேட்கைதுன்ப
வித்தம்புயங்க ணிகாகுகன்றாளில் விவேகிகட்கே. (௭௰)

கட்கம்பணிய மிளிர்ந்துசெவ்வேலைக் கடிந்துதெவ்வ
ருட்கம்பணிய முதுசிந்தவீறி யுயர்நமற்குள்
வெட்கம்பணிய விழிமாதராசை மிகாதெனையாள்
புட்கம்பணிய வயல்சூழ்பழநிப் புரவலனே. (௭௧)

வலஞ்செய்யவஞ்சக மில்லார்புண்காய்மருந்தேமலர்மெய்
யிலஞ்செய்யவஞ்சகமோடெழிர்ப்போனைவென் றேய்தவர்விண்
டலஞ்செய்யவஞ்சக மேத்துநகுகாகதி தந்தருணித்
திலஞ்செய்யவஞ்சக திச்சங்குகுஞ்செந்திற் சேவகனே. (௭௨)

சேவற்கனத்து வசமுருகோனருட் சீர்மறந்து
மேவற்கனத்து நடையார்பதத்தினும் வீழ்ந்துகணைப்
பூவற்கனத்து வரிக்குத்தென்றற்குப் பொருங்குயிற்கு
மாவற்கனத்து முழுமூடர்க்கென்று வருங்கதியே. (௭௩)

வருந்தும்புலவருந் தேகம்பொய்யேயது வான்கழுகும்
பருந்தும்புலவருந் துந்தலைத்தென்ற பரிசுணர்ந்தே
யிருந்தும்புலவருந் தீதகற்றுமதி யீர்மறையுந்
திருந்தும்புலவருந் தேடுங்குகன்புகழ் செப்புமினே. (௭௪)

செப்பந்தவிரக வான்கடமதுபுன் சிந்தைவிட்டுத்
தப்பந்தவிரக ஞங்குகனன்பர் தமக்கிருத
னப்பந்தவிரக லக்கோதைமார்தந் நளினவலை
யப்பந்தவிரக நோய்தணிக்கின்ற வருமருந்தே. (௭௫)

அரும்பரஞ்சோதிக் குமதனல்செங்கை யயினெடுங்கட்
சுரும்பரஞ்சோதிக் கவின்மாதர்பாசச் சுருக்ககல்பண்
பரும்பரஞ்சோதிக் கவிசொல்பவரும் பணிபழநி
வரும்பரஞ்சோதிக் கடியார்க்கிங்கேது மறுசென்மமே. (௭௬)

மறுத்தவிராகம ஞேகரயாவு மதித்துவளா
யறுத்தவிராகம னத்தவர்தேடமு தாயகுக
சிறுத்தவிராக மலர்ப்பதநாதவென் றீமைமுற்றும்
பொறுத்தவிராகம மெய்ப்பொருடந்து புரந்தருளே. (௭௭)

புரவலருந்தவ வேத்துநற்கீரன் புலம்பொழிய
விரவலருந்தவ ருங்கதிரோன்பொரு வேல்விடுந்தற்
பரவலருந்தவ ருக்குமெட்டாத பரமவென்மேற்
கரவலருந்தவ னங்கணுருவ்கை காவென்றுமே. (௭௮)

காவிரிவான திரும்பலநாகக் கவின்கலைகோ
தாவிரிவானதி தோய்வார்குமரன் சரண்கருதார்
நொவிரிவானதி கத்தாறெழுத்தைதபு நோக்கலரந்
தோவிரிவானதி கைப்பென்றகல்வரிச்சோம்பர்களே. (௭௯)

களங்கக்கரவரி நேரல்குன்மாதர்சங் கத்துமுறை
களங்கக்கரவரி யுந்தெரியாத கவடமனக்
களங்கக்கரவரி னத்தும்புகாதெனைக் காத்தருடு
களங்கக்கரவரி மாவுரியான்பெற்ற கண்மணியே. (அ0)

கண்ணியரும்பின கொண்டுகுமரன் கழலிணையை
நண்ணியரும்பின் மெய்ப்புளகத்தொடு நாளுமர்ச்சித்
தெண்ணியரும்பின மாமயல்போக்கி யிராறொளிலெத்
திண்ணியரும்பின மன்பதிகாண்பது திண்ணமன்றே. (அக)

அன்றலங்கோதை நெடுங்கடற்சூரை யடர்த்துயர்வேந்
தன்றலங்கோதை புருதவகைவைத் தனைமயின்மேற்
சென்றலங்கோதை யொருத்திக் கொழித்தனைதேன்கதம்ப
மன்றலங்கோதை முருகாவெனக்கொர் வரமருளே. (அஉ)

அருளமருந்து திகள்பலசெய்துகொண் டாடியபத்
தருளமருந்து களைநீங்கவு டெழுந்தற்பரதெவ்
வருளமருந்து கதிர்வேலவபுண் மதித்தமியேன்
றெருள்மருந்து தரநீயலான்மற்றெவர் தேவில்லையே (அங)

தேவாங்குகனகத் தாந்தைகுரங்கிந் தியமுடும்பி
ஞுவாங்குகனகத் திட்டளைத்தூட்டி நயந்துபிரா
யேவாங்குகனகத் தாமயின்னூர்பற் றிகந்தமரர்
கோவாங்குகனகத் தன்புசெய்வீர்கதி கூடுதற்கே. (அச)

கூடங்கடக்குஞ் சரதவினோதக் குமரனைப்போ
ராடங்கடக்குஞ் சரமுகத்தாருக னாற்றல்விண்ணோர்
பாடங்கடக்குஞ் சரவணவேளைப் பணியதிவி
சேடங்கடக்குஞ் சரசமின்னூரன்பு தீருநெஞ்சே. (அரு)

தீரம்பயிலு மதிதந்துபாவமுந் தீவினையுங்
கூரம்பயிலு மயங்கவஞ்சங்குடி கொண்டவிழி
யாரம்பயிலு மனுகாமலென்றனை யாண்டருள்வாய்
வாரம்பயிலு முகிறவழ்சோலைமலைக் கந்தனே. (அசு)

கந்தனந்தாமஞ் சரிமெல்கதம்பம் கனகபயா
நந்தனந்தாமஞ் செறிவாவிகள்பழ னங்கடொறும்
வந்தனந்தாமஞ் சுகச்செந்திலாய்நின் வரமெனவோ
துந்தனந்தாமஞ் சளகமின்னார்மருட் சூதொழிந்தே. (அஎ)

சூதங்கமுகட் டயமேறுய்மதுரையிற் சூழமணர்
தீதங்கமுகட் பறகழுவேற்றுந் திருக்குமரன்
மாதங்கமுகட் டன்றந்த இளைய வரன்பழநிக்
கோதங்கமுகப் பண்மார்பவேளெங் குலதெய்வமே. (அஅ)

சூலவம்பரவை பருகயவேற்கைக் குகாதிகழ்பொற்
கலவம்பரவை நெடுமாருதிவிசன்மரு காகணல்குல்
வலவம்பரவை ரிகர்மடமாதா வசத்தழுந்தும்
பலவம்பரவை புகாதாண்டருள்செய் பரகதியே. (அகூ)

பரந்தகரந்தம முலைணக்செல்வாவெனப் பாய்மதத்தா
பரந்தகரந்தம யூரந்துலாவும் பகவசுரும்
பரந்தகரந்தம தோதியிற்கொண்டபொற் பாவையராற்
பரந்தகரந்தம நற்குமுனின்னருட பார்வைசெய்யே. (கூ0)

பாரப்பரிய மிகுபந்தபாசப் பயிரெழுப்புந்
தாரம்பரிய தனையதிற்சிக்கித் தளர்ந்துமதன்
கூரம்பரிய மயங்காமல்ஞானங் கொடுத்துமயிற்
சீரப்பரிய தனில்வந்துகாத்தருள் சிற்பரனே. (கூக)

சிற்பங்கணிதங் கரணமிலக்கணந் தேர்ந்திடினுங்
கற்பங்கணிதங் கலிதீர்ந்தண்ணிறுநற் கதிவருமோ
வெற்பங்கணிதங் குறைந்துளதாருகன் மெய்கலங்க
முற்பங்கணிதங் கியகதிர்வேலனை முன்னுமினே. (கூஉ)

முன்றூட்டமனிய வெற்பசைத்தாயுடன் முற்றாறிலை
நன்றூட்டமனிய னுடலித்தாய்குறு நாதனெங்குஞ்
சொன்றூட்டமனிய கல்விதந்தாயெத் தொழிலுமுள்ளா
புன்றூட்டமனிய ராரறியார்மறை யுட்பொருளே. (கூ௩)

பொருகந்தருவ விரதவெய்யோனைப் பொருந்திநிற்கு
முருகந்தருவ ரிசைசூழ்பழநியின் மோனர்விண்ணோர்
வருகந்தருவ ரொவருந்தொழ வளருங்குமரா
யிருகந்தருவ னிதைதலைவாவின்ப வீடருளே. (௯௪)

வீடம்பரந்தரு வேந்தனெஞ்சுந்திரு வெண்கொடிமேன்
மாடம்பரந்தரு விண்ணினுமேவி வளர்ந்தபுக
ழாடம்பரந்தரு ணம்பெறினும்பய னன்றதிவி
சேடம்பரந்தரு நாதாநின்பார்வை செலாவிடினே. (௯௫)

விடியாக்கருவரி யன்னபவப்பல மேவிடினு
முடியாககருவரி னுந்தீந்துபேரின்ப முற்றுமிரு
குடியாக்கருவரி ஞாலத்தமரா கொடும்பகையைப்
பொடியாக்கருவரி வேலவர்நாமம் புகன்றிடினே (௯௬)

புகரும்பனக ரூரித்தெரித்தாற்குப் புனிதநெறி
டகரும்பனக மகலாதமோனப் பரமனமு
துகரும்பனக விவலர்சகாயன்சுருதிதெளிந்
தகரும்பனகர் தொழுங்குமரன்பதஞ் சார்ந்தனமே. (௯௭)

தனனத்தனந்தன மென்றேநடிக்குந் தனிமயில்வா
கனனத்தனந்தன வேதன்மெய்ஞ்ஞானக் கலசமுனி
வனனத்தனந்தன தன்பணிசெந்தில் வளர்குகன்மெய்ப்
யினனத்தனந்தன வைப்பவந்தீர்க்கு மிறைநெஞ்சமே. (௯௮)

சமையஞ்சமய மிதுவெண்ணியவரந் தந்தருள்வாய்
யிமையஞ்சமய னெறியிற்புகாம லிருந்துதிருத்
திமையஞ்சமய மிருகூந் லாரைச் செயித்தவர்பூ
வமையஞ்சமய னெறுஞ்சூழ்வைகாபுரி யற்புதனே. (௯௯)

புதருமலையுந் தவஞ்செய்துற்றோருமப் பொன்னகர்வி
பதருமலையுந் துயர்காய்குமரற் புகழ்நர்விரும்
பதருமலையுந் தியாகத்தராமெயதிர் புல்லலர்வீம்
புதருமலையுந் திவளங்கொண்டாள்வர்புவனங்களே. (௧௦௦)

நூல் முற்றும்.

மந்தரவாகுவி நெஞ்சத்துறுதமறைப் பொருளே
மந்தரவாகுவி தந்தூர்பவன்றுணை வள்ளறெரு
மந்தரவாகுவி யன்சேடனஞ்ச மயிலில்வரு
மந்தரவாகுவி ஞேதவரோதயன்வாழியவே. (௧)

கங்கைதருந்திருமைந்தன் குமரக்கடவுடனிச்
செங்கையிலங்கியவேல்வாழிவாழிநற்சேவலெழில்
பொங்கியதோகைமயில்வாழியெங்கும்புகழ்ந்ததந்தி
மங்கையுமின்பமிகுங்குறநங்கையும்வாழியவே. (௨)

குமரனந்தாதி-முற்றுப்பெற்றது.

சென்னபட்டணத்திலிருக்கும்

புங்கத்தூர்

கந்தசாமிமுதலியார் முயற்சியினால்

அச்சிட்டுநிறைவேறியது.